Mail 11/12/23

8413
12 DEC 2023
வேலூர் மாவட்டம்
இந்துசமய அறநிலையத்துறை

சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.கே.தயாசாகர், இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், வேலூர் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (4ப) எண்.02

நாள்: 18.11.2023.
சோபகிருது, கார்த்திகை–2
திருவள்ளுவராண்டு–2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செ.மு.ந.க.எண்.67123–9/ 2016/பி3, நாள்.22.05.2017.
4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க.எண்.48833/2016/பி.3, நாள். 25.05.2023 மற்றும் 20.09.2023.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை உள்ள கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் நிலை–2 சுருக்கெழுத்து தட்டச்சராகப் பணிபுரிந்த திருமதி.வி.திலகா 19.03.2015 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தியுள்ளார் எனவும், அன்னாரது மகனான திரு.கே.தயாசாகர் என்பவர் 23.09.2016 நாளிட்ட விண்ணப்பத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்ததன்பேரில் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது செயல்முறையில் வேலூர் இணை ஆணையர் அலுவலகத்தில்

இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 07.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், திரு.கே.தயாசாகர் அவர்கள் கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுத்தகுதி பெற்றிருந்தார் எனவும், அன்னார் கருணை அடிப்படையில் பணி வேண்டி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும், எனவே, திரு.கே.தயாசாகர் என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 07.06.2017 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, வேலூர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் திரு.கே.தயாசாகர் என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணையின் மீது மனிதவள மேலாண்மைத்துறையின் கடித எண்.3248/அ2/2023-1, நாள்.07.09.2023-ல் வெளியிடப்பட்டவாறு அத்துறையின் இசைவு பெற தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
✓திரு.கே.தயாசாகர், இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், வேலூர்.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

நகல்:-
கருவூல கணக்கு அலுவலர், வேலூர்.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு.சந்யா
18/11/23
பிரிவு அலுவலர்

18/11/23